## மீகஹகிவுல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுலை 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 27 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீகஹகிவுல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் ரூபா 413,757 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை வங்கியின் வங்கிக் கணக்கு தொடர்பாக இனங்காணப்படாத ரூபா 206,609 தொகை பேரேட்டுக் கணக்கில் வரவு பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 8,979,370 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 262,883 தொகையான இனங்காணப்படாத பெறுமதி ஒன்று செலவு பதிவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நிலுவை நிர்மாண வேலை கடன்பட்டோர் என ரூபா 804,279 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது

(ஊ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் என ரூபா 1,006,864 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நீதி மன்றத் தண்டப் பண வருமானமாகிய ரூபா 147,513 வும் மற்றும் முத்திரைக் கட்டண

வருமானம் ரூபா 352,595 தொகையும் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம வருமானம் என ரூபா 775,406 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டிற்கான பேரேட்டில் மூலதன உதவி மற்றும் ஏனைய வருமானக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 56,926 இற்கான பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகைக்கான மூலதன உதவியினை வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி மற்றும் வர்த்தக வரி ரூபா 180,210 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பம்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்பு செலுத்த வேண்டிய ரூபா 778,849 தொகையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 2,192,185 இற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்பட்ட வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,943,748 தொகையாகும்.

1.3.3 தொங்கல் கணக்குகள்

------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொங்கல் கணக்கில் ரூபா 385,534 தொகைக்கான செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய, கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,651,027 தொகையாகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,845,899 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

ரூபா 96,784,514 தொகை பெறுமதியான 07 கணக்கு விடயங்கள், சாட்டுதல் கட்டளை அல்லது காணி உறுதிகள், நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், தீர்க்கப்பட்ட விதம் பற்றி சான்றுகள், பேரேட்டுக் கணக்குகள் மற்றும் விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க மற்றும் சபையின் அங்கீகாரம் இன்றி பணம் மற்றும் பண்ட உதவிகள் என 05 சந்தர்ப்பங்களில் ரூபா 142,096 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) 217 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (ii) 218 ஆம் விதி | கணிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பன மீளாய்வாண்டிற்காக கணிப்பீடு செய்திருக்கவில்லை. |
| (இ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டம் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 11 வர்த்தக நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண ஏற்பாடுகள் (விஷேட சட்டம்) | சபையில் கடமையாற்றும் ரூபா 25,000 மிகைத்த மொத்த வேதனம் ஒன்றினைப் பெறும் 505 உத்தியோகத்தர்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டணமாக ரூபா 12,625 தொகை சம்பளத்தில் இருந்து கழித்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 371 | 15 சந்தர்ப்பங்களில் சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 656,300 தொகைக்கான முற்பணம் 2016 ஆகஸ்ட் வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 306,605 தொகை பெறுமதியான வைப்புக்களை ஆதனவளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி துணை கருவிகள் தொடர்பாக தகவல்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

1.3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2014 நவம்பர் 12 திகதிய EST-4/PEMNT/03/0225 இலக்க சுற்றறிக்கையின 07 ஆம் பிரிவிற்கு முரணாக 2015 நவம்பர் 04 திகதி முதல் செயற்படு முகமாக பிரதியீட்டு வெளிக்கள தொழிலாளர் என நியமனம் ஒன்று வழங்கி 2015 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆக இரண்டு மாதங்களுக்காக ரூபா 22,134 தொகை மொத்தச் சம்பளமொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,338,210 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 914,202 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-----------------------------------------------------------

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 805,528 தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 57.3% (ரூபா 2,693,909) தொகை ஒன்று நிலுவையாக இருந்தது.

2.2.2 கடை வாடகை

-----------------------

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான 22 கடைகள் தொடர்பாக புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியில் வாடகை அறவிடப்படாமல் பழைய பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தமையால் 2014 ஜனவரி முதல் 2015 திசெம்பர் வரையான காலப்பகுதியில் மாதாந்தம் ரூபா 51,525 தொகை வீதம் ரூபா 1,236,600 தொகை வருமானமொன்றினை சபை இழந்திருந்தது.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,152,208 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,339,799 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

2014 ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த 05 நிர்மாண வேலைக்காக 2016 ஆகஸ்ட் 08 வரையும் வேலை பூர்த்தி செய்திருக்கவில்லை. அத்துடன், அந்த நிர்மாண வேலைகளுக்காக வழங்கியிருந்த ரூபா 494,051 இற்கான முற்பணத்தைத் தீர்ப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------------------

1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் பிரகாரம் குப்பைகள் மீள்சுழற்சிகளுக்காக சபையின் குறிக்கோள்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். எனினும், பதுளை வீதியில் 13 மைல் தூண் என்ற இடத்திற்கு அண்மையில் திறந்த பகுதி ஒன்றில் குப்பைகளை குவிப்பதன் காரணமாக சுற்றியுள்ள பகுதிகளுக்கு சுற்றாடல் சார் சிக்கல் காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயம் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் எல்லா நிறுவனங்களும் வருடாந்தம் பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயன்படுத்த வேண்டும். எனினும் பிரதேச சபை நடைமுறை ஆண்டின் போது அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தியிருக்கவில்லை.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

(i) பிரதேச சபைக்கு சொந்தமான டிரக்டர் வண்டி ஒன்று விளைவற்ற நிலையில் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 533,100 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த டொலமைட் உற்பத்தி செயற்திட்டத்திற்கான கட்டிடமொன்று 11 வருடங்கள் பூராகவும் விளைவற்று காணப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்